புதினபத்திரிகையாகவும்
புதினபத்திரிகையாகவும்

இந்து சாதனம்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்"

ஸ்ரீராதிரு (1889) ஆவணியீ உ௳ உ ஞாயிற்றுக்கிழமை

['ரேலிபோன்' இல. 56]

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. 5-00
இலங்கை, இந்தியா: " ரூ. 8-00
தொலைப்பயணி: " ரூ. 9.00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே மத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ 10-00
" அரைக்கலம் ரூ. 5-00
" காற்கலம் ரூ. 3-00
அதேந்த முறைக்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சாரு. } யாழ்ப்பாணம்;-பிரசோற்பத்தி ஆண்டு ஸ்ப்ரிமீ ௩௨ (1931 ஒக்டோபர் 1௨) திங்கட்கிழமை. { இலக்கம்—௩௪.

வைபதிருவை.

சீர்பூத்த கருவிநா னுளர்ச்சி தேங்கச்
செம்பூத்த சிகமாக மங்க லோங்கப்
வார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப்
பரம்பூத்த சைவநிலை பரோர் தாங்கப்
பேர்பூத்த கொளுந்தத் தினிது ஞங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த மறிவிச்சை தொழிலென்றேனு
மதம்பூத்தலிநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லரமா குமமே
இழ்க வையக முந்துயர் தீர்கவே.

திறம் கொளுக்கி ஓடுகள்,

மோர்கன், நட்சத்திரம் 14, இஞ்சுப் பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங்கசியா. அண்டப் பார்த்தாப் போலக் கூரையில் அடுக்கலாம். பாரங்குறைவு, பெல னதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

விற்கும் இடங்கள்:—
யாழ்ப்பாணம்:—
மு. இராசேந்திரமூப்பர் கிட்டங்கித்தெரு.
பரித்தித்துறை:—
மு. நமசிவாயம் கடைத்தெரு.
ஊர்காவற்றுறை:—
கரம்பன்.
திருக்கோணமலை:—S. சின்னையா வில்லூண்டி.

(H 12, 10-1 32,)

உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4. (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½. (3) திருக்குறள் மூலமும் பரிமேழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4. (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக் கதை ரூ. 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும் உரையும் ரூ. 3. (9) காலடியார் ரூ. 2. (10) வைதம் மூலமும் விருத்தியுரையும் ரூ. 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகக்கியாட்லாக் இனும. ஒற்றுமை ஆபீஸ். 2. சைதாப்பேட்டை, மதராஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(Y 17 79—8 9-32,)

Established 1909. A S. M. A. Khader Brothers

மருந்தேயாயினும் விருந்தோடுண், என்ற ஔவைப்பிராட்டியாருரைப்படி

இந்த விளம்பர முழுதும் தாங்களும் வாசித்து
தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசித்துக் காண்பியுங்கள்.
குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக்கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லையுயிர்க்கு. (குறள்.)

தன்பமுறுவது நம்முயிரேயாதலால் மூவகைத்தோஷத்தாலும் பிணியாராதலில் தடுப்பதற்காகிய நலலவிதமாகிய அவிழ்தங்களை உண்டவர்களுக்கு பிணிகளால் துன்பமில்லையென திருவள்ளுவநாயனுர் கூறிய திருக்குறளையுணர்ந்த அறிவிற்சிறந்த தன்புடையோரே அருந்தக்கவீர்களாக.

நாதங் கெட்ட தேகத்தைக் காக்கும்; நாட்பட்டரோகத்தைப் போக்கும்.
உங்கள் பணத்திற்கும் மருந்தின் குணத்திற்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது.
நிகரற்றது! குணமுற்றது!! மகிழ்வுற்றது!!! புகழ்பெற்றது!!!!

ஜீவானந்த தாது வீர்த்தி லேகியம்.

ஓ! அன்பர்காள்!! ஒருவனுக்கு வீரியத்தில் ஏதேனும் விகாரப்படுமுண்டாயிருக்கின் அவன் எவ்விதகாரணோஷத்திற்குரியவனுயினும் வீரியக்கெடுதலின் காரணர்த்தமாகவே அவன் மனதிற்கு மேலும் மேலும் விசனத்தைத்தரத்தான் உண்டாக்கச்செய்யுமென்பது ஆயுர்வேத சாஸ்திரங்களின் துணிபுத் தவிர, இராஜாங்க வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அதுவே, நபுஸகம், அல்லது பேடித்தனமென்று சொல்லப்படும் அவ்விதநிலைக்காரமான கொடிய வியாதியை அடியோடுதொலைத்து உலகின் வாழ்க்கையில் என்றல்காணுத ஆரோக்கியசுகாதாரவின்பத்தையடையச் செய்விப்பதில் இந்த ஜீவானந்த தாது வீர்த்தி லேகியமே மிகவுந் சிறந்தது. இந்த லேகியத்தின் முக்கிய குணமாவது: இளமைப் பருவத்தில் பற்பல தூர்ச்செய்கைகளினுல் ஏற்பிராயத்தில் தேஹபலமுன்றி காரியுன் தளர்வடைந்து இரத்தம் கெட்டுப்போய் சந்தானவிர்த்தியில்லாமல் வயோதிகர்போல் மயங்கிநிற்கும் புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகி பிரமேகச்சூட்டால் காதமானது ஜலம்போல் நீற்று, வைகாலசதி மலசிக்கல், பசியில்லாமை, ஜீரணக்குறவு, நித்திராபங்கமென்னும்லிதம், தரிதங்லிதம், மூளையின்கொதிப்பு கண்ணெரிவு, தேகஅனல் இடிப்புவலி, நீர்ஏப்பு, நீரெரிச்சல், நீர்சருக்கு முதலிய சர்வரோய்களையும், நோய்க்குத் தக்கபடி 40, அல்லது 20 நாளில் பூரணமாய் கலப்பித்தி, இரத்தத்தை சுத்திசெய்து தங்கள் தங்கள் சுபாவத்திற்கு மேலான வீரியத்தையும், மனவுற்சாகத்தையும் உண்டாக்கி, இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, தேகசக்தி, சந்தானவிர்த்தி, முதலிய நலன்களைச் செய்வதில் இதுவே மேலானதென்றும் கடவுளுக்குப் பொதுவாய் உறவியாகச் சொல்லுகின்றோம், அப்படி இதில் சுருக்கமாய் காட்டியுள்ள குணலக்ஷணத்திற்கு மேற்கொண்ட பலனையடையவில்லையென்று கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபீஸ் செய்விக்கப்படும். அப்படி ஷை கிரயத்தை கொடுக்கத் தவறினுல் கோட்டுமூலமாக வசூல் செய்து கொள்ளலாம் மேலும் இ மருந்தின் குணலக்ஷணத்தைப்பற்றிச் சர்தேகிக்கிறவர்கள், ரமதமருந்தாலயத்திற்கு கேரில்வந்து தங்கள் தங்களுக்குரிய சர்தேகத்தை போதுமானவரையுமுள்ள கிராணைச் செய்துகொண்டு வாங்கலாமென்பதாகும் திண்ணமாய் கூறுகின்றோம்.

40 நாள் 80 வேளை டப்பி 1-க்கு கிரயம் ரூ 8 0 0
பரீட்சைக்கு 20 நாள் 40 வேளை டப்பி 1-க்கு ரூ 4 0 0

வி பி தபால் சார்ஜ் பிரத்தியேகம், முற்பணமனுப்பினுல் வி. பி. தபால் செலவு இனுமாய் அனுப்பப்படும். பினுவகு, சிங்கப்பூர், பினாங்கு, சிறபான், சோலாலம்பூர் ஆகிய ஐக்கிய மலாய் நாட்டு வாசர்களும் மருந்தின்கிரயமும் தபால் செலவு ரூ 2-க்கு சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டுமென்று ஷை பிரதேசவாசிகள் அட்வான்ஸ் அனுப்பினுல், பாக்கி தொகைக்கும் வி பி. யில் அனுப்புவோம். ஆர்டர் செய்பவர்கள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டெழுதவும்.

Our Sole Agent:
P. M. Abdulcader Esqs,
Ceylon Post Agency
No. 105, Piachaud's Lane Maradana,
Colombo, Ceylon.

எமது விலாசம்:
☞ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் மெடிக்கல் ஹால்
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா,
இந்தியா.

(Y. 15. 6-7-31—5-7-32.)

தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள
கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, கெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகாரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப் புகழ்பெற்றது மிக இலேசானது. மலிவானது ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். சாங்கேசன் துறையிலே சுவாமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணுடி ஓடுகளுமுண்டு

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

(Y. 9 8 1—31 12 31.)

ஸ்ரீகதிரைமலைத் திருப்பணி.

கலிவிருத்தம்.

திருமலிந்திடு தென்னிலங்கையின்
மருவுசண்முகன் மலையினன்பணி
புரியவேசிறு பொருள்கள்வேண்டுநீர்
அருளியாங்கவனருள் பெற்றுய்மினே.

தருமசீலர்களே!

உலகிலுள்ள எவ்வகை ஆத்மாக்களுக்குந் தம்முடைய அருட்செல்வத்தை வரையாது கொடுக்கும் வள்ளலாகிய அறுமுகப் பெருமான் கோவில் கொண்டருளிய ஸ்ரீகதிரைமலையிலமைந்திருக்கும் விவேகானந்த மடத்தில் தாகமுற்றடைந்தோர்க்குத் தாக சாந்தி செய்விக்கப்பட்டு வருகிறது. அன்றியும் முன்னே அம்மலைக்குச் செல்வோர்க்கு அதிக கஷ்டத்தை விளைத்த சுற்று வழிகளை நீக்கி இப்போ அதிக சமீபமாகிய வழியைத் திறந்து முந்நூற்றைம்பது படிவரையில்பலபெரியோர்களது முயற்சியினுலும், நிர்வியோபகாரசகாயத்தாலும் செவ்வனே கருங்கற் கட்டிடமாய் கட்டப்பெற்றுள்ளது. எஞ்சிய கருங்கற் கட்டிடத்திருப்பணியைமுற்றுவித்தற்குஇப்போது பொருளுதவிவேண்டும். ஆகையால் பணம் அனுப்புவோர், தெளிவாகத் தங்கள் விலாசத்தை யெழுதி கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—R. சிந்தாமணி அவர்கள்,
கச்சேரி யாழ்ப்பாணம்,
மேற்பார்த்து ராவண சங்கு சாது வசம்
கொடுப்பது.

(H. Y. 9. 8-6&7 12-31)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் எனக்கு மிகுந்த வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை யான் விளம்பரத்தில் உலகன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் வாத்திரமல்ல எழைகளும் இதனுலுண்டாகுங் கதத்தை அடையும்படி பொதுஜன நன்மைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிய விளம்பரம் வருகிறேன்

இது சாலாமிஸ்திரி, குன்மம்பு, மொலிந், கல்லுரி, குமரன்தாகா, பிதானு, சாலாமுன்னி, சப்பேமுத்வி, பிள்தான, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தவரி, சீர்முளரிவிதை, காகப்பூ வங்கபம், அப்ரகப்பம், பவளப்பம், வெள்ளிபம், அமுகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகளைச் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனுல் சிரமிது, சேக்கப்பிடி, சிரடைப்பு, மூலச்சூடு, தருவருமுத்தன் உண்டாகிறகுன்ம பக்கவாயு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம் கைகால் காக்கல், வலி, இடிப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீங்கும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடையவுடன் ருதுக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் மலமும் பெருவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை குந்தம் ஒன்றுக்கு ரூபா உ0. அரைகுந்தமுக்கு ரூபா ௩0. கால் குந்தமுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிரசாங்கியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினுல் முன்னமே ஆட்டர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிலகான ஆரோக்கியகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்து,
மட்டக்களப்பு,

(Y.75. 31-12-31.) சிலோன்.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரசோற்பத்திஞ ஐப்பசிமீ ௩௧ திங்கட்கிழமை.

அரசாங்கசபை படும் பாடு.

இலங்கைப் புதிய அரசாங்கசபை விஷயமாக யாழ்ப்பாணத் தமிழ் மக்களாகிய நாங்கள் என்ன என்ன அக்கிரமங்களை எதிர்பார்த்திருந்தோமே, அவைகளெல்லாம் மெல்ல மெல்ல ஒவ்வொன்றாக வாத்தலைப்பட்டுக் கொண்டன. சில மாசங்கட்கு முன்னர் அயிரோப்பிய உத்தியோகத்தர்களின் பிரயாணச் செலவிற்காகிய பணம் சனப்பிரதிநிதியென் றிருப்பவர்களுடைய எண்ணத்திற்கு நேர்விரோதமாக, தேசாதிபதியின் "பரம அவசியம்" என்னும் அதிகாரத்தைக் கொண்டு அதிகாரிகள் நினைத்தபடியே கூடிய தொகை உதவுவதாக நிச்சயிக்கப்பட்டது.

இரண்டாவதாக 1932-ம் ஆண்டுப் பரிபாலனச் செலவுத்திட்டத்தை விதிக்கும் விஷயம் அரசாங்கசபையில் விவாதத்திற்கு வரலாயிற்று. பணமுட்டுக் காரணமாக இலங்கை அரசிறை வருவாய் இப்போழது குறைந்துவிட, அரசாங்க பரிபாலனச்செலவையுங் குறைக்கவேண்டிய நிலைமை ஏற்படலாயிற்று. இல்லையேல், இலங்கை மக்களிமீது பணமுட்டுக் காலமென்றும் பாராமல் இரக்கமின்றி இன்னமும் புதிய வரிகளை விதிக்கவேண்டியே வரும். இப்போழது வருடப் பரிபாலனச் செலவுத் திட்டத்தை விதிக்கும் விஷயத்தில் பரிபாலனச்செலிற்கு இப்போழதுள்ள வருவாய் போதாவிட்டால் இன்னமும் புதிய வரிகளைச் சனங்கள்மேல் விதித்து இயன்றவரையிற் சனங்களிடத்துள்ள பொருளை உறிஞ்சுகொண்டு பரிபாலனச் செலவிற்கு எவ்வகையான முட்டுமின்றி நடத்திக் கொள்ளலாகுமென்பதே அதிகாரிகளின் நோக்கமாக, சனப்பிரதிநிதிகள் இந்தப்பணமுட்டுக் காலத்தில் அப்படிச்செய்தல் அடாதகாரியமென்றும் அயிரோப்பிய உத்தியோகத்தர்களின் சம்பளத்தைச் சமையத்திற்குத் தக்கபடி குறைத்து வரவையுஞ் செலவையுஞ் சரிப்பண்ணிப் பரிபாலனத்தை நடத்தவேண்டுமென்றும் அபிப்பிராயங் கொண்டனர். அதிகாரிகள் நாம் மேலே சொன்ன பிரகாரம் புதிய வரியை விதித்துப் பரிபாலனச் செலவையும் வரவையுஞ் சரிப்படுத்த முன்றபோது மேற்படி அரசாங்க சபையிலுள்ள சனப்பிரதிநிதிகளுள் 33 அங்கத்தவர்கள் மேற்படி நிர்ணயம் இரண்டாம் முறை வாசிப்பதற்குக் கொண்டுவரப்பட்டபோது, அதிகாரிகளின் நோக்கத்திற்கு மாறாக விவாதிக்கத் தலைப்பட்டனர். நிர்ணயம் சம்மதத்திற்கு விடப்பட்டால் தோற்தல் தமக்குப் பிரதிகூலமாக முடியுமென்பதை அதிகாரிகள் நன்கு அறிந்துகொண்டனர். "பரம அவசியம்" என்ற அதிகாரத்தைக் கொண்டு தேசாதிபதி அதிகாரிகள் கொண்ட நிர்ணயத்தைச் சனப்பிரதிநிதிகட்கு நேர்விரோதமாக நிறைவேற்றப் புகுகின் சனப்பிரதிநிதிகள் அத்தனை பேரும் அரசாங்க சபையை விட்டு விலகிவிடக் கூடும் என்ற பயமும் சந்தேகமும் அதிகாரிகட்கு இருத்தல் இயல்புதானே. சனப்பிரதிநிதிகள் விலகுவரேல், முதலிலிருந்து வேறொரு அரசாங்கசபைதான் உண்டாக்க வேண்டிநேரிடும். இது இலகுவிற் செய்யக்கூடிய கருமமல்ல. இந்தவிதமான சங்கடங்களையெல்லாம் யோசித்துப்போலும், தேசாதிபதி இச்சந்தர்ப்பத்தில் என்னவிதமாக நடந்து கொள்வதென இலங்கை மகாமந்திரிக்குத் தெரிவித்திருக்கின்றார். பரிபாலனச் செலவுத்திட்ட நிர்ணயம் பின்போடப்பட்டிருக்கின்றது. மகாமந்திரியாரின் திருவாக்கு எவ்வகையாக எழுமோ யாமறியேம். ஆனால் மகாமந்திரியாருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், பாபம் "வீட்டுத்தோந்தரை அதிகம்." "வீட்டுத் தோந்தரை" என நாம் குறிப்பது, இங்கிலாந்தில் கரசியல்விஷயமாகவும்வட்டமேசை மகாநாட்டு விஷயமாகவும் நேர்ந்துள்ள கிளர்ச்சிகளும் மாறுபாடுகளும் சிந்தனைகளுமே. பாராளுமன்றம் இப்போழது கலைந்திருக்கின்றது. இவ்வகையான சங்கடங்களுள் இலங்கை மகாமந்திரி உடனுக்குடன் இந்த விஷயத்தைச் சிந்தித்து நிச்சயப்படுத்துதல் முடியுமோ என்பதுஞ் சந்தேகம். இனி, பரிபாலனச் செலவுத்திட்ட விஷயம் வருகிற டிசெம்பர்மீ 22 தேதிக்குள் அதாவது 3மாசகால வெல்லையுள் முற்றுப்பெறாவிட்டால் இந்த அரசாங்க சபை கலைந்தே தீரவேண்டும். இனி, மேலத்தியோகத்தர்களுடைய சம்பளம் பிரமாலித்ததுபோல் இங்கிலாந்திலிருந்து விதிக்கப்பட்டு வருதல்லாமல், அரசாங்கசபைக்கு அவர்களுடைய வேதனத்தைக் குறைக்க வேனுங் கூட்டவேனும் எள்ளளவும் அதிகாரமில்லையென்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தனமூர் அரசாங்கசபை தற்சமையம் இவ்வாறான சஞ்சல நிலைமையிலிருக்கின்றது.

இச்சபையினுடைய கேவலமான நிலைமையை அறிந்தே நுண்ணியவிவேகிகளாகிய நம்தமிழ்மக்கள் இதிற்பங்குபற்றுதொழிந்தனர். 'பட்டாலறிவன் சண்டாளன்' என்றவிதமாகச் சிங்களர் இப்போழதுதான் இச்சபையின் கிருத்திரமங்களையும் பூரண மின்மையையும் அறியலாயினர். நமது யாழ்ப்பாணத்தில் இந்த அரசாங்கசபையைப் புறக்கணித்தது தவறென்று சொல்பவர்கள் இன்னமும் யாருமிருப்பரேல், அவர்கள் தாம் இச்சபையிற்சேர்ந்து சம்பளம் பெற்று இப்பணமுட்டுக்காலத்திற் சீவியம் நடத்தலாமென்ற சுயநயங்கருதும் கீழான நோக்கங் கொண்டவர்களென்பதை எவரும் அறிந்து கொள்ளக்கடவர் புதிய அரசாங்கசபையின் குறைவுகளை எடுத்துக்காட்டும் விஷயத்தில் இப்போழது நேர்ந்த பணமுட்டுச் செய்யும் உதவி பெரும் உதவியென்பது உற்றுயோசிப்பின் உணரத்தக்கதாம்.

நூல்களைப்பற்றிய குறிப்பு.

1. "தமிழ் கற்பித்தற் முறை":—இதன் ஆக்கியோன், சென்னை, அரசியலார் கல்வி இலாகா அங்கத் தினராகும் ஸ்ரீ. க. சம்பந்தப்பிள்ளை B. A. L. T. ஆவர். இச்சிற நூலுக்கென ஆர்காடு டிஸ்திரிக் கல்வி உத்தியோகத்தர் ஸ்ரீ. T. V. அப்பர்சுந்தரம் M. A. M. Ed. (லீட்ஸ்) அவர்கள் ஒரு முன்னுரை கூறியிருக்கின்றனர். சென்னை மைலாப்பூர் புத்தகவியாபாரிகளாகும் 'அம்பி'காசகோதரர்கள் இதன் பிரசுரகர்த்தர்கள் ஆவர். இவர்களுக்கே இதைப்பற்றிய பூரண சுதந்தரம் உடையது. இதன்விலை அணா 12

ஆரம்பக் கல்வியாகும் தமிழ் மொழியினை ஆசிரியர்கள் சிறுவர் கட்குப் படிப்பிக்கும் முறையை இருபாகமும் முதற்பாகத்தில் ஐந்து அதிகாரங்களும் இரண்டாம்பாகத்தில் எட்டு அதிகாரங்களுமாக, தமிழ்மொழியின் பெருமை—ஆசிரியர்கடன்—பண்டை முறைகள்—தன்மை—சிறப்பு—ஒறை—ஆகிய தலைகளில் ஆக்கியோன் விரித்துரைத்திருக்கின்றனர்.

2. 'ஸ்ரீ ராமபிரான்':—இச்சிறநூல் ஸ்ரீ இராமாயணத்தையை மிச் சுருக்கி, மதுவம்சம் முதல்— ஸ்ரீராம பட்டாபிஷேகம் வரையிலுள்ள கதை எழுதப்பெற்றுள்ளது. ஆக்கியோன் ஸ்ரீ. சே. நாராயணன், எம். ஏ; எம். எல்; இதன் கடைசிப் பக்கங்களில், ஸ்ரீ ராமராமாயணம் என ஸ்ரீ ராமாயணத்தின் ஒவ்வொரு காண்டத்திலும் நடந்த சமாச்சாரங்களைச் சேர்த்து இராமநாமத்துடன் கூட்டி பஜனைசேர்ற்ற விதமாக சமஸ்கிருதபாஷையைத் தமிழெழுத்தில் எழுதிப் பதிப்பித்திருக்கின்றனர். அருமை பலவிளக்க அநுபந்தமும் ஒன்று உளது. விலை அணா 4. பிரசுரகர்த்தர்கள் மேலே செல்லப்பட்டவர்களேயாவர்.

3. பாண்டவர் சரிதம்:—இந்நூலும் மேலே சொல்லப்பட்ட பிரகாரம் பாண்டவர் சரித்திரத்தை மிச் சுருக்கிச் சுருக்கமாகக் கூறுகின்றது. இதன் ஆக்கியோன், ஸ்ரீமாந். Y. மஹாலிங்கசாஸ்திரிகள் B. A; B. L; அட்வகேட், மதராஸ். இதற்கு, திருச்சி, தேசிய சலாசாலைத் தமிழ்ப்பண்டிதர், பிரம்மஸ்ரீ எஸ். வி. வரதராஜ ஐயரவர்கள் ஒரு முன்னுரை கூறியிருக்கின்றனர். மேலே செல்லப்பட்ட நூல்களின் பிரசுரகர்த்தர்களே இதையும் பிரசுரித்துள்ளார். இதன்விலை அணா 4.

யாப்பருங்கலச் சூத்திரமும் சண்டியலங்காரச் சூத்திரமும்:—இப்பெரும் இலக்கணநூல் மூலங்கள் பெரிய எழுத்தில் அழகுற அச்சிற் பதிக்கப்பெற்று, யாழ்ப்பாணம் பன்றிக்கோடு, பிரம்மஸ்ரீ. காசிவிசுவநாத ஐயர் சண்முக ஐயர் எழுதிய குறிப்புரையுடன் வெளிவந்திருக்கின்றது. இதற்கு கல்லூர் ஸ்ரீமத். த. கைலாசபிள்ளை அவர்கள் ஒரு பிரமாண வாக்கியம் எழுதியிருக்கின்றனர். "ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் மனனஞ் செய்வதற்குமின்றி யையாததாகும்" என்று பதிப்பாசிரியர் முகவுரையிற் கூறியிருப்பது அவதானிக்கற் பாலது. பிரதிகள் மேற்படி யாரிடம் பெறற்பாலன விலை சதம்—50.

எமக்கனுப்பிய பிரதிகளை மன்றி யறிதலுடன் பெற்றோம்.

யாழ்ப்பாண நகரசங்கம்.

இச்சங்கம் யாழ்ப்பாணக் கச்சேரியிலே 10 20 31-ல் கூடிற்று அப்பொழுது

(1) C அருளம்பலம் அவர்கள் பிரேரிக்க M ஆசைப்பிள்ளை அவர்கள் அனுமதிக்க, 4-ம் வட்டாரத்திலே நாவலர்தறை றோட்டையும் செ மணிரோட்டையும் இணைக்கும் புதியரோட்டுக்கு 'கனகரத்தினம் றோட்டு' என்னும் பெயரிலோறு தீர்மானிக்கப்பட்டது. இது நகரசங்கத்தின் முதல் தலைவரும் தேசாபிமானியுமாகவிருந்து காலஞ்சென்ற ஸ்ரீ ஆ. கனகரத்தினம் அவர்களின் ஞாபகத்திற்காக

(2) உத்தியோகத்திற்கு மனுப்பண்ணுபவர்கள் குதிரைகள் வாகை விருப்பவர்கள் நகரசங்க அங்கத்தவர்களுடன் தாமாகவோ அல்லது தமது சொந்தக்காரர்மூலமாகவோ ஏதும் உரையாடப் பரிந்து பேசினால் அவ்விதஞ் செய்தவர்கள் அவ்வுத்தியோகத்திற்கு அல்லது அக்குதிரைகளுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள் என்ற கருத்தமைய ஒரு பிரேரணை C அருளம்பலமவர்களால் பிரேரிக்கப்பட்டது. அனுமதிப்பாரின்றி அது நிராகரிக்கப்பட்டது

(3) தலைவருடைய பிரேரணையும், R R ஸல்லையா அவர்களுடைய அனுமதிப்புடனும் வருகிற வருடத்திற்கு 1931-ம் வருடத்தின் திர்வைகளும் வரிகளுமே வைக்கப்படத் தீர்மானமானது.

(4) யாழ்ப்பாணக் பெரியகடையின் வாடகை வீதங்களைக் குறைக்குமாறாகக் கடைக்காரர் அனுப்பிய மனுப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

(5) குதிரைகைக் தீர்மானமானவுடன் கேள்பிக்காரன் உடனே தலைவர் நியமிக்கும் ஒரு தொகையைக் கட்டவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது இத்தொகை மூன்றி லொன்றுக்குக் குறைந்ததாகவேயிருக்கும்

பத்தாயம் வைத்தல் கொட்டில்கள் போடுதல் முதலியன விடப்படுவதாகப் பேசப்பட்டது.

M ஆசைப்பிள்ளை அவர்கள் பிரேரிக்க C அருளம்பலம் அவர்கள் அனுமதிக்க தலைவர் உபதலைவர், சுகாதாரவைத்திய உத்தியோகஸ்தர், R R. ஸல்லையா அவர்கள், A M. M. அப்துல்காதர் அவர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு சிறுகமிட்டி மேற்படி விஷயங்களைக் கவனிக்கவும் கொட்டில் போடுவதற்கான இடங்களைத் தெரிவதற்கும் நியமிக்கப்பட்டது.

கரையூர் குடியேற்றவிஷயமாக, தலைவர், அரசாங்கசபை உள்ளாட்டு மந்திரியாருக்கு, எழுத வேண்டுமெனத் தீர்மானமாயிற்று.

பின் சிலபல விஷயங்கள் அவதானிக்கப்பட்டபின், மக்கிட்டெங்கமயில் முக்குவர்கொடுத்த பெட்டிசம் ஆலோசிக்கப்பட்டு, அப்பெட்டிசத்தை, முன் சிலியாதெருவில் வண்ணார் கொடுத்த பெட்டிசத்தை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட சிறுகமிட்டிற்கு விசாரணைக்கு அனுப்புவதாகத் தீர்மானம்பண்ணப்பட்டது

நிச்சோர்க்காரர் கொடுத்த பெட்டிசம் விசாரிக்கப்பட்டு, அப்பெட்டிசம் வடமாகாணப் பொலிஸ் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

இலங்கை அரசாங்க சபை.

இச்சபையின் வடமாகாண வட்டாரங்களாகும் வர்காவற்றுறை, காங்கேயன்துறை, யாழ்ப்பாணம் பருத்தித்துறை வட்டாரங்களிலுள்ள தெரிவுரிமையாளரின் பதிவுப் புத்தகம் யாழ்ப்பாணக் கச்சேரியிற் பார்க்கலாம் என்றும், இன்னும் இரண்டு வாரங்களுள் தங்கள் பேர் பதியப் பெறாதவர்கள் பதிவு பண்ணிக்கொள்ளவும், பதிவுக்கு உரித்தில்லாதவர்களைப் பதிவு செய்திருக்தால் அவர்களை நீக்கிக் கொள்ளவும் விண்ணப்பஞ் செய்யவேண்டுமெனவும், இதைப்பற்றிய சகல விபரங்களும் யாழ்ப்பாணக்கச்சேரியில் அறிந்து கொள்ளலாமெனவும் வடமாகாண அரசாட்சித் தலைவர் மிஸ்டர் E.T. டைசன் தெரிவிக்கின்றனர்.

மதுரை நெசவு தொழிற்சாலை.

இச் சாலையார், இனிமேல் அந்நிய தேசத்து நூல்களைத் தருவிப்பதில்லையென்றும் தேசிய மஹாகாட்டரின் கிபந்தனைகள் யாவற்றையும் ஏற்றுக்கொண்டு அவர்களின் காப்பில் தம்மை ஒப்புக்கொடுத்தனர்.

காந்திஜியின் மூக்குக்கண்ணாடி.

மஹாத்மா அணிக்திருக்கும் மூக்குக் கண்ணாடி சுத்தமானசுதேசிபொருளாகுமென்பதை அநேகர் அறியாதிருக்கலாம். பம்பாயிலுள்ள 'பலிசர் அன்ட் ஹோரி' என்னும் வியாபார சமுதாயத்தார் கண்ணாடிகளை யுண்டாக்கினர். அதன் ஆவாலாம் வெள்ளியினால் இந்தியத் தொழிலாளிகளினால் ஆக்கப்பட்டது.

அம்பட்கார் வேண்டாம்!

பம்பாய், 10-10-31.

மிஸ்டர். P. பாலு, மிஸ்டர். B. T. மயோனுக்கார், மிஸடர் படேல் ஆகிய தலைவர்களின் தலைமையில் தாழ்த்தப்பட்டவகுப்பினர்கூடி, வட்டமேசைச்சமாஜத்திலே அம்பட்கார் கூறிய கூற்றைக் கண்டித்து, தேசிய மகாநாடே தமது பிரதிநிதியாகும் எனத் தீர்மானித்தனர். தங்களுக்குப் பிரத்தியேகப் பிரதிநிதித்துவம் தேவையில்லை யென்றனர். மஹாத்மாவில் தங்களுக்கு நம்பிக்கையுண்டென்றும், அம்பேட்கார்மீல் நம்பிக்கையில்லையென்றும் தீர்மானித்து முதன் மந்திரியாருக்கும் மஹாத்மாவுக்கும் தந்தியனுப்பினர்.

சிரத்தானந்த ஞாபகத் தருமசிலையத்தாரும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வாகுரிமைமாத்திரம் கிடைத்தால் போதும், அம்பட்கார் கேட்டவண்ணம் பிரத்தியேக பாதுகாப்புகள் தேவையில்லையென்றும் வற்புறுத்தி தந்திச் செய்தியனுப்பினர்.

(Y. 19 23 9 31 ; 27 9 32)

காந்திஜி தன்னை விவரிக்கின்றனர்.

'டெயி ஹெரல்ட்' என்னும் பத்திரிகையில் மஹாத்மா தன்னைப்பற்றி விவரிக்கையில்; தரம், சத்தியத்தில் அழியா அன்பும், தேவனில் பயமத்தியும் தமக் குண்டென்றும், சக்கரம் விடுதலையின் அறிகுறி யென்றும், தமது உடை தமது முதலாளிமாரின் உடை யென்றும் (ஏழை இந்தியர்களின் உடை), பெண்கள் இந்திய விடுதலையில் முன்வந்மையே இந்தியா விடுதலைக்திரப்பட்டதென்றும் கூறுகின்றார்.

போலிக் குருக்கள்மாருக்கும் மற்றும் போலிப்பிராமணர்கட்கும் ஓர் அறிவிப்பு.

அன்பிற்கணிகலமான வேதியருக்கும்
குருத்தொழிலுக்குத்
தகுதியற்ற குருக்கள்மாருக்கும்
பிராமணவகுப்பினர்க்குத்
தகுதியற்ற பிராமணர்களுக்கும்.

"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாளொழாஅ ரெனின்"

என்னும் வாக்கையே விரதமாகக் கொண்டொழுகும் தாசனாகிய யான்,

"நத்தப்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க்கல்லாலரிது"

என்னும் வள்ளுவர்வாக்கைக் கைக்கொள்ளும் உங்கட்கு அடியேன் எழுதும் சுகசெய்தி யென்னையோவெனில், அன்பர்காள், போலிப் பிராமணர்காள், நீங்களாவே, நீங்கள் வேதியகுலமே மேலான வகுப்பென்றும் நீங்களே சைவசமயத்தைக் கெடுத்துவிடாது மென்மேலும் உச்சநிலைக்குக் கொண்டுபோவதற்கு எனறும் உயர்தோர்களென்றும், வஞ்சனை, பொறாமை, கனவு முதலிய ஆசாபாசங்களைத் துறந்தோர்களென்றும், ஓர்பொதும் சைவசமயத்தினைப் பொய்ச்சமயமாக்கவில்லையென்றும், நீங்கள் விலக்கிய ஆட்டையும் மாட்டையும் கோழிமுதலியவைகளையும் புசிக்க விரும்புவீர்களா?

மேலும் தாவணி மாறுடி ஒட்டியாணம் தரவணிந்து நாளம்போட வல்ல மாதர்கட்கு ஒரு விதமாகவும், மற்றையோர்க்கொருவிதமாயும் உபசரணை செய்ய விரும்புவீர்களா? மேலே சுட்டிக்காட்டிய இவ்வல்லக்கினைத்தவறி, உலகின் மேலநோக்கம் வயிற்றைக் கழுவவும் மேலைத் தேயநாகரீகத்தினை நிலைநாட்டிக்காட்டும் அரசாலத்தார் நவீன உடைகளையும், நவீனபானங்களை உட்கொள்ளுதற்கும் அவர்கள் கீழ்வேலை பார்ப்பதற்கும் விரும்புவீர்களா? இவ்வாறு கீழ்நோக்குமுடைய தேசியர் மேல் நோக்குவது எக்காலம்! எக்காலம்!!

"இதனை யிதனா லிவன் முடிக்கு மென்றாய்ந்து,
அதனை யவனகண் விடல்"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு அருகர் ஆவீர்களா? மேலும் இதனைவிட்டு உலகட்கு உண்டாகும் ஆட்சேபனைகளையும், ஆசங்கைகளையும் உலகன் உலகன் மனச்சாட்சியென்னும் நீதவானிடம் கேட்டு விளங்கிக்கொள்ளுவீர்களாக.

நோப்பாயிற் கல்லிமான்;

"கருமஞ் சிதையமாற் கண்ணோட கல்லார்க்
குரிமை யுடைத்திவ்வுலகு"

'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கும்,
பொய்யா விளக்கே விளக்கு"

"ஆயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்,
காவலன் காவா னெனின்."

என்னும் மேற்காட்டிய இக் குறட் பாக்களை மேலெழுதிய கல்லிதிறமையாய்ந்த, பொனப்பாட் செப்போலியன், பொய்யர்களைப் பெரித்தப்போடுகோனென்றும், இதனை இப்போது உசனாடையி லெழுதிய யானே, கமலன் வீட்டு அடுப்பும் கலிபாடுமே, என்ற மேலோர் மெச்சரைப்படி, மறுபடி செய்யுன் கடையில் விளக்க ஆயத்தமுடையவனாக இருக்கிறேன்.

நோப்பாய் தெற்கு,
10—10—31.

இங்ஙனம்
கா. வ. காசிப்பிள்ளை.

கொழும்பு விவேகானந்தசபை.

ஐயா,

இக்கடிதத்தைத் தங்கள் பத்திரிகைகளிற் பிரசுரிக்குமாறு வேண்டுகின்றேன்.

கொழும்பில் பிரசுரிக்கப்படும் நினைவர்த்தமானிப் பத்திரிகையில் ஷெ சபையின் அங்கத்தவர் எனக் வைச்சாத்திட்டு திரு ம. வ. குமாரசாமி என்பார், இச்சபை வருடந்தோறும் ஓர் சமயபாடப் பரீட்சை நடத்துவதால் இந்நிலவு எங்களுந் தொண்டாற்றுகின்றதென்றால், ஒக்ஸ்போட் கேம்பிறிட்ஜ் சர்வலாசாலைகளும் இந்நிலவுக்குத் தொண்டு செய்கின்றன என்று சொல்ல வேண்டிவருமென எடுத்துக் காட்டினர்.

ஒக்ஸ்போட் சர்வகலாசாலை இக்கே நடத்தும் பரீட்சை ஒன்றுமில்லையாகவும் மேற்குறித்த விஷயக் கடிதத்தின் ஆக்கியோன் அதற்கும் கேம்பிறிஜ் சர்வலாசாலைக்கும் சமத்துவமளித்தனராக, கேம்பிறிஜ் சர்வலாசாலை நடத்தும் பரீட்சைக்கும் விவேகானந்தசபை நடத்தும் பரீட்சைக்கும் அவர் ஒப்புமைகண்டமை நாம் நூதனமாகக் கொள்ளேம்.

சமயஞானத்தை நம் நாட்டிற் பரவச்செய்தல் சபையின் நோக்கங்களுளொன்றாதலால், அந்நோக்கத்தின்பொருட்டே இப்பரீட்சையை அது சமயபாடங்கள் வித்தியாசாலைகளில் பயிற்றப்படுதற்கண் ஊக்கத்தை யளிக்குமென்ற நியாயத்தால் சபை நடத்திக்கொண்டு வருகிறது. இப்பரீட்சைக்கு கேம்பிறிஜ் பரீட்சைகளுக்குப் போல் பிரவேசக் கட்டணங் கிடையாது. இப்பரீட்சையிற் றேறுபவர்களுக்குச் சபையின் செலவிலேயே பரிசுகளும் நற்சாட்சிப் பத்திரங்களுமளிக்கப்படும். இப்பரீட்சையினது உண்மைத் தன்மையை நாம் கூறின் இதனால் சபைக்கு ஏற்படும் சிரமமாத்திரையால் அல்லது செலவுமாத்திரையால் இதனை ஓர் மிகப்பெரிய கேலியென நாம் பாராட்ட முடியாவிடினும் இதன் மூலியாக எமது பிள்ளைகளுட் பெரும்பாலாரானது சிறு வயதிற்றானே சமய பாடங்களைக் கற்றுக்கொள்ளத் தூண்டப்படுவோர்களாலும், அவர்களுள் ஒரு சிலராவது ஒருவாலது தாலற்றவதற்குத்தக நின்று தகுந்தெறியைத் தேடிக்கொள்ளச் சாதியப்படுமாலும், அப்பேருண்மையே பெரும்பேறாக நாம் போற்றக்கூடியதாகுமென்ற நியாயத்தால் இப்பரீட்சையுமோர் பெருந் தொண்டாமெனச் சபையார் மதித்திருக்கலாம், இதனை யுணர்ந்தே யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள சைவவித்தியாசாலை யதிபர்களாகிய பெருமக்களும் பிள்ளைகளும் எமது சபையின் பரீட்சையை ஆதரித்திருக்கின்றன ரெமதெண்ணம். அதில இலக்கைக்கும் இப்பரீட்சையின் பயன் கிடைக்கின்றதில்லையென்பது சபையின் குற்றமாகாது. ஏனெனில் புத்தர்களும், மகமதியர்களும், கிறிஸ்தவர்களும் இப்பரீட்சையை ஆதரிப்பர்களென நாம் காத்திருக்க முடியாது. இந்துமதத்தினருள்ளும் பரீட்சையிற் கலந்துகொள்ளுதற் குரிமையுடையோராகவிருந்தும் அதிற் பங்குபற்றாதிருப்பவர்களின் குற்றத்தைச் சபைமேலேற்றக்கூடாது.

"உலகமெல்லாம் ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷனைப்பற்றி நன்கறியார்கள்" என்று நிருகுமாரசாமி செல்லியிருப்பதை யெடுத்துகொண்டு, உலகத்தில் எத்தனையோவிடங்களிலிருந்து மிஷனைப்பற்றி யொன்றுமறியா ரநேகருண்டென வாதிப்பது முறையாகுமென்றால், அதில் இலக்கைக்கும் சபை தொண்டாற்றுகின்றதென்றாலும் அவர் மழுக்காணலாம்.

மேற்கூறியவற்றைக் கொண்டு வாசகர்கள் தாமே சபையின் பரீட்சைக்கும் சர்வகலாசாலைப் பரீட்சைக்குமிடையிலுள்ள தாழ்வொப்வுயர்வுகளை நிச்சயிக்கக் கடவர். இச்சபை இப்பரீட்சையை நடத்துவதால் மிகப்பெரியசேவை யொன்றைச் செய்கின்றதென முன்னே சைவத் தமிழ்ப் பத்திரிகாதிபர்களெல்லாம் கூறிச் சபையாரை வாழ்த்துப்படுத்தினரென்பதை கூறித்தயாம், திரு. குமாரசாமியாருடைய சித்தாந்தத்தை அவர்களுக்கும் சைவவித்தியாசாலையதிபர்களுக்கும், மாணாக்கர்களுக்கும், ஏனைச் சைவாபிமானிகட்கும் எடுத்துக்காட்ட விரும்பியே, அவர் ஆங்கிலத்திலெழுதிய கடிதத்தின் ஓர் பகுதிக்குப் பதிலாவன்ன இக்கடிதத்தைத் தமிழிற் பிரசுரிக்கின்றேன்.

திரு. குமாரசாமியாருடைய கடிதத்தின் எஞ்சியபகுதியை நான் ஏற்றுக்கொண்டேனென்றால், அன்று அவருடைய கூற்றுக்களெல்லாம் நிராகரித்தற்கு விருப்புவோர் தமது மனமாரப் பதிலிறுக்கின் பத்திரிகைப் பத்திகள் கொள்ளா. எனினும் அவருடைய இன்னுமொரு கூற்றைமாத்திரம் எடுத்துக்காட்டுவோம். "விவேகானந்தசுவாமியானது விவேகானந்தசுவாமிகள் கொண்ட வயிராக்கியத்தின் பின்பற்றுகின்றிலது" என்பது எம் நண்பர் கூற்று. விவேகானந்தசுவாமிகளே "யாரெனினும் ஒருவருடைய நெறியைப் பிறரெல்லாம்பின்பற்றவேண்டியதில்லை; ஒவ்வொருவரும் தத்தமக்கியைந்த நெறிகின்றாய்வடையல்" என்ற பெருநெறியைப் போதித்திருக்கின்றார்கள். அன்றியும் இச்சபை குறித்த யாரோ ஒருவரைப் பின்பற்றுவதற்கென நிறுவப்பட்டதா? ஸ்ரீ இராமகிருஷ்ண பரமாத்மதேவரது பெயராலழைக்கப்படும் சபையிற் சேர்ந்தோரெல்லாம் அம்மகானுபாவரைப் பின்பற்றுகின்றார்களா? அப்பெரியாரைப் பின்பற்றவென்ற யோக்கியமாகத் துணிந்தாலும் அது எளிதிற் கைகூடுமா? அவருடைய திருவுருவப்படத்தைப் பக்தியோடு நோக்கினாலுள்ளத்திலேயே மோனமும் சாந்தியுமுதிக்கின்றனவென்றால் அகாது பெயரால் பெருஞ்சத்தமிடுவாரைக் குறித்து நாமென் சொல்வது?

இவ்வுலகிற்றோன்றிய பெருமக்களது வாழ்க்கைகளெல்லாம் உலகம் முழுமைக்கும் முன்மாதிரியாகத் திகழ்கின்றன. அவர்களில் எல்லோருக்கும் சமபக்குண்டு. அப்பெரியார்களில் ஒவ்வொருவரைத்தாமபிமானிப்பதாகக் கொள்ளிக்கொள்ளும் ஒரு பகுதியார்க்கு மாத்திரம் அவர்கள் சொந்தமல்ல. அவர்களின் வாழ்க்கைச் சிறப்பையும் ஒழுக்கத்தையும் கவனித்து ஒவ்வொருகருமவாரும் தாம்தாம் கற்றுக்கொள்ளக் கூடியவற்றைத் திருவுருவைத் துணையாகக் கொண்டு உணர்ந்து கொள்ளுதே முறையான வழி. அவற்றை யுணர்ந்தும் பொறுப்புக்குச் சிலர்காரணனென் றுகொள்ளாதிருக்குமுயிய விசாலமான நோக்கை நான் கொள்வோமாக. உண்மைகளெல்லாந் தம்மளவிலேயே பெருமையுள்ளன. அவற்றை ஒவ்வோர்காற் சொல்வார்களது பெருமையை உண்மைகள் இரக்கவேண்டா. உண்மையை யுணர்ந்து தான்பேறுறதற்குச் சாதகமாயவழியில் ஒருவன் நிற்பானாயின் அச்நெறி இன்னவருடையதென்ற ஒரு நாமம் அதற்குத் தேவையானதன்று.

அ: வைத்தியலிங்கம்,
ஓர் சைவசமயி.

சர்வதேச அஹிம்சா சங்கம்.

உலகமெங்கும் அஹிம்சைக் கொள்கையைப் பரவச் செய்வதற்காக லண்டன்மாநகரத்தில் ஒருசங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதை ஸ்தாபித்தவராகிய மிஸ்டர். ஈ. பிரான்ஸிஸ் யுட்னி (E. Franbis Undy) என்பார் அந்த சங்கத்தைப்பற்றி 'லைன கௌட்' என்னும் பத்திரிகையில் எழுதியுள்ள வியாசத்தின் சாராம்சம் பின் வருமாறு:—

"உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலுமுள்ள ஜனங்கள் புலாலை உண்கிறார்கள். ஆனால் இந்தியாவிலுள்ளவர்கள் மிகக் குறைவாக உண்கிறார்கள். ஜீவர்களைக் கொண்றே புலால் உணவு பெறப்படுகின்றது. நம்முடைய செய்கைக்குத் தகுந்த வண்ணமே நமக்குப் பலன் கிடைக்கின்றது.

ஒருவன் படுக்துன்பத்திற்குக் காரணம் அவன முன்பு பிறஜீவர்களுக்குச் செய்திருக்கும் துன்பமேயாகும். அவன் துன்பஞ்செய்வதை விடுகின்றவரையில் அவனை விட்டுத் துன்பம் விலகாது.

மனிதன் பிற ஜீவர்களுக்குத் துன்பஞ் செய்கையில் தனக்கும துன்பஞ்செய்து கொள்ளுகின்றான். ஏனெனில் அவனுடைய ஆத்ம விருத்தி தடைப்படுகின்றது.

புலால் விற்றல் மிகவும் பாபகரமானதும் அருவருக்கத்தக்கதுமான ஓர் தொழில். ஜனங்கள் புலால் உண்பதை விட்டுவிட்டால் புலால் விற்றல் தானாகவிடும்.

உணவுக்காகவும், அலங்காரத்திற்காகவும், வேடிக்கைக்காகவும் செய்யப்படும் ஜீவவதையை ஒழிப்பதற்காகவே இந்த "சர்வ தேச அஹிம்சா சங்கம்" நிறுமிக்கப்பெற்றுள்ளது. இந்தச்சங்கத்தில் அங்கத்தினராக விரும்புவோர் முதன் முதலில் எவ்விதமான புலால் உணவையும் விட்டுவிடவேண்டும் ஒருவர் அங்கத்தினரான பிறகு ஒருவேளை புலால் உண்ணுமபடிநேர்ந்தால் அவர் உடனே சங்கத்தினின்றும் விலகவேண்டும்.

ஜனங்கள் உணவுக்காகக் கொல்வதை நிறுத்திவிட்டால அலங்காரத்திற்காகவும் வேடிக்கைக்காகவும கொல்வதையும் எளிதாகவில் நிறுத்திவிடுவார்கள்.

"உணவுக்காக ஏன் கொல்ல வேண்டும்"? மனிதனுக்குத் தேவையான எல்லா விதமான உணவுபொருள்களும் மரக்கறிப்பதார்த்தங்களிலேயே நிரம்பிக்கிடக்கின்றன. எந்த ஜீவனையும் கொல்லவேண்டிய அவசியமே இல்லை.

பிரசாரம் செய்வதற்கு அதிகபணம் தேவையாயிருப்பதால், இச்சங்கத்திற்குப் பொருள் சாகயம் செய்ய விருக்கின்றவர்கள், கௌரவ காரியதரிசி, அகிமசை நிலையம், 137, எல்ஜின கிரெசென்டு, லண்டன், W 11 என்கிற விலாசத்திற்கு எழுதவும்.

இச்சங்கத்தை ஸ்தாபித்தவராகிய மிஸ்டர் ஈ பிரான்ஸிஸ்யுட்னி என்பவரும் இந்தச் சங்கத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமதி செயிண்ட் ஜான் ஜேம்ஸ் என்னும் அம்மையாரும் அதிக உழைப்பு எடுத்துக் கொண்டு பிரசாரம் செய்து வருகிறார்கள்.

சர்வதேச அஹிம்சா சங்கம் அதிக விருத்தியடைந்து உலகத்தில் நித்யாநுஷ்டானமாய் நடக்கும் ஹிமசையை ஒழிக்க அருள் புரியுமாறு கருணாமூர்த்தியாகிய கடவுளை என்றும் பிரார்த்திக்கின்றேம்.

—லோகோபகாரி.

உண்மை முஸ்லிம் பிரதிநிதிகள் யார்?

ஜநாப் ஷேர்வானியின் கருத்து.

9-10-31-ல் அலகாபாத்தில் நடைபெற்றஒரு பொதுக் கூட்டத்தில் ஜனாப் ஷெர்வானி தலைமை வகித்துப் பின்வருமாறு பேசினார்:—

சர்வகட்சி மகாநாட்டுப் பிரதிநிதிகள் உண்மையான பிரதிநிதிகள் இல்லையென்றுமகாத்மா காந்தி சர்வகட்சி மகாநாட்டுக் கூட்டத்தில் கூறினார் ஸா முஸ்லிம்கள் ஷரபி இனத்தை மறந்திருக்கிறார். அப்பொழுது நான் அவர் அருகில் இருக்கவும் போய்விட்டேன். இருந்திருந்தால், 'முஸ்லீம் லீகிலும், கிலாபத் கமிட்டியிலும், அகில இந்திய முஸ்லீம் மகாநாட்டிலும் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்? இவர்களில் எத்தனை பேர் தங்களுடைய வருஷ சந்தாவைச் செலுத்தித் தங்கள் அங்கத்தினர் பதவியைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்?' என்பன போன்ற கேள்விகளைக் கேட்டிருப்பேன் இந்த ஸ்தாபனங்களிலுள்ள அங்கத்தினர்களின் தொகை எல்லாவற்றையும் சேர்த்தாலுட கானகாஸ் அங்கத்தினர்கள் தொகை ஆயிரமட்டுக்கு அதிகமாயிருக்குமென்று கூறவே. தேசிய முஸ்லீம் கட்சியின் ஸ்தாபனங்களின் இந்தியா முழுவதிலும் எவ்வளவு மேலிருக்கின்றன மெலேகூறப்பட்ட ஸ்தாபனங்களின் மெம்பர்கள் இந்தியாவிலே எத்தனை இருக்கின்றன வென்று கேட்கிறேன்.

ஸர் முகம்மது ஷாபியா, ஜனாப் ஜின்னாவும், தனிப்பட்ட பேச்சுகளில், கூட்டுத்தேர்தல் தொகுதிகளே முஸ்லிம்களுக்கு நன்மை பயக்கக்கூடிய தென்றும், முஸ்லிம்கள் பெரும்பான்மையோராயுள்ள மாகாணங்களில் அவர்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்பதற்காகப், பெரும் பான்மையோராகவுள்ள மாகாணங்களில், தங்கள் பிரதிநிதித்துவத்தை இழந்துவிடக் கூடாதென்றும் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். தனித்தேர்தல் தொகுதிகள் முஸ்லீம்களுக்கு விரோதமானதென்று ஒருமுறை ஜனாப் ஜின்னா கூறியிருக்கிறார். ஆனால் இன்று அதேவிஷயத்தைத் தமது சமூகத்தாருக்கு புகழ்த அவர் பெரிதும் முயற்சிசெய்துகொண்டிருக்கிறார் இவ்விஷயத்தில் முஸ்லிம் சமூகத்தாருடைய அபிப்பிராயமென்ன வென்பதை அவர் எப்பொழுது தெரிந்து கொண்டார்?

தனித்தேர்தல் தொகுதிகள் வேண்டுமா, கூட்டுத் தேர்தல் தொகுதிகள் வேண்டுமா வென்று பொதுஜனங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டுவிவாதப்பற்றித் தேசிய முஸ்லீம்களுக்கு எவ்வித ஆட்சேபமு மில்லை. இதைப்பற்றி போபாலில் ஒரே ஒரு தரந்தான் பிரஸ்தாபம் உண்டாயிற்று ஆனால் இஸ்லெமியர்களே இதற்குச் சட்டி இந்தப் போட்டிக்கு, தேசிய முஸ்லீம்கள் உடனே தயாராயிருந்தார்கள் இந்தப் போட்டிக்கு, ஒரு விதத்தில் தேசிய முஸ்லீம்கள் என் பயப்படுகிறார்களென்றால், இந்தப் போட்டி நடைபெறுவதற்கு முன்னர் பலகான்பூர் கலவரம் எற்பட்டுவிடுமோ வென்பதுதான் சர்வகட்சி மகாநாட்டில் முஸ்லீம் பிரதிநிதிகள், கனம் ஆகாகானைத் தலைவராகக் கொண்டிருப்பது விளங்கிக்கிடக்கிறது கனம் ஆகாகானுடைய அரிய குணநலன்களுக்காக அவரைப் பெரிதும் பாராட்டுகிறேன். ஆனால் அவருக்குத் தற்கால முஸ்லிம் இந்தியாவின் நிலை என்ன தெரியும் என்று கேட்கிறேன். அவர் இந்தியாவுக்கு வருவதே மிகவும் அரிதாயிருக்கிறது. அப்படி வந்தாலும், பம்பாய்க்கும் டெல்லிக்கும் வந்து தங்கிவிட்டுச் செல்கிறார். அல்லது மூன்று நாட்கள் டெல்லிக்கு விஜயஞ்செய்துவிட்டுப் போய்விடுகிறார் மஜிஸ்டிரேட்டுகளின் ஒருவர் தமக்கு நற்சாட்சிப்பத்திரம் அளிக்கும் படியான பரிதாப நிலைக்கு மௌலானா வந்துவிட்டார். மௌலானா, பிரிட்டிஷாருடன், காங்கிரசுக்கு விரோதமாகச் சமரஸ ஏற்பாடு செய்துகொள்ளலாம். ஆனால் சமயம் நேர்ந்தபோது, மற்றச் சமூகத்தினரைப்போல் முஸ்லீம் சமூகத்தினரும், தேசபக்தி யுடையவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவார்கள். பிரிட்டன் இராஜதந்திரிகள், முஸ்லீம் சமூகத்தினரைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக்கொள்வதைப்பற்றிப் பெரிதும் பாராட்டுகிறேன். இப்பொழுதே உண்மை வெளிவந்திருக்கிறது இப்பொழுது சர்வகட்சி மகாநாட்டிற்குச் சென்றிருக்கும் பிரதிநிதிகளுக்கு நல்வழி காட்ட வேண்டுமென்றும் அப்படி அவர்கள் தவறிவிட்டால் சுதந்திரம் பெற நமக்குப் போதிய பலம் அளிக்க வேண்டுமென்றும் ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக. -ஸ்வசக்தி

திருநாமநல்லூர் கல்வெட்டுகள்.

(கருவூலத்தான்)

[கல்வெட்டினால் நமது நாட்டின் அரசியல், சமயம் முதலியன தெரிகின்றன. மற்றும் எழுத்துக்களின் வரிவடிவம் பழக்க வழக்கம் சொற்போக்கு முதலியவைகளும் விளங்குகின்றன. இவற்றைத் தமிழர் ஒழுங்காய் கற்றண்டமிழ் மொழியில் வரிவடித்தோடு விளக்கிவெளியிடாதது தமிழ் மொழிக்கு ஒரு பெருங் குறை ஆனால் அவற்றின் போக்கைத் தெரிந்துகொள்ள சைவ வைணவக் கோயில்களிலுள்ள படியின் எழுத்தொலியைத் தழுவி, நில, ககை, கோயில், பட்டு, தானம், அரசியல் முதலியன செறிந்து வரும் சிலவற்றைத் தருகிறோம். வரி வடிவங்களோடு தமிழ் விளக்கம் பெற்று வரவேண்டுமென்ற எண்ணத்தோடு கீழே இருபது படிகள் தருகிறேன். இவை கல்வெட்டுகுறிப்பின் (Epigraphica India) உதவிகொண்டு அதில் ரோமர் ஓலியில் (Roman script) காட்டியதை ஒட்டி எழுதியதாகும். இதனை வாசகர்கள் படித்துப் பண்டைக் கோயில்கள் நமக்குப் பயக்கும் நன்மையை மதிக்க வேண்டுகிறேன்]

(௧) ஸ்வஸ்தி ஸ்ரீ 1மநிரை கொண்ட கோபரகேசரி பன்மர்க்கி யாண்டு 28-வது திருமுனைப்பாடி திருநாவலூர்திருதொண்டீஸ்வரன் திருக்கற்றளி செய்வித்த 2 ராஜாதித்த தேவர் தாயார் நம் பிராட்டியார் கோக்கிழானடிகள் பரிவாரத்தான் சித்திர கோமளம் வைத்த கொந்தா விளக்கொன்றுக்கு வைத்த 3 சாவா மூவா பேராடு தொண்ணூறு. ஈழ விளக்கு ஒன்று. இது பனமாரேஸ்வரர் இரக்கை. மேற்படியான சித்திர கோமளம் வைத்த விளக்கொன்று ஈழவிளக்கு.

(௨) உஸ்வஸ்தி ஸ்ரீ மநிரையும் ஈழமும் கொண்ட கோபரகேசரி பன்மர்க்கி யாண்டு 39-வது திருமுனைப்பாடி திருநாவலூர் திருதொண்டீஸ்வரத்து மகாதேவர்க்குப் பின்னையார் ராஜாதித்த தேவர் தேவியார் இலடராயர் மகனார் மகாதேவடிகள் தமையனார் அரையர் ராஜாதித்தன் புகழ்விப்பவர் கண்டனை 4சாத்திவைச்ச கொந்தா விளக்கொன்றினுக்கும் வைச்ச சாவா மூவா பேராடு நூறு. நிலவிளக்கு நிறை 70பதின்பலம். 5சிறாத்தலை எரிப்பதற்கு இது பன்மாரேஸ்வரர் இரக்கை.

(௩) ஸ்வஸ்தி ஸ்ரீ உ கன்னர தேவர்க்கு யாண்டு 17-வது முனைப்பாடி நிருநாவலூர் திருதொண்டீஸ்வரத்து மகாதேவர்க்கு 6ஸ்வஸ்தி சுகிரான் மயோதயாசலாதித்ய சக்திநாத சிம்மநந்தவர்ம சிங் மகா இலஞ்சன மலையகுலோத்பவ மலைய குல குணாமணி ஸ்ரீமத் நரசிம்மநாரம்மலாடுடைய நாட்டான் சித்தலடவனுடைய நரசிம்மநாவன்மன் வைத்த கொந்தா விளக்கொன்றினுக்கு வைத்த பொன் பதின் 8கழஞ்சு இப்பொன் பதின் கழஞ்சுகொண்டு வெண்ணை நல்லூர் நாட்டு செவலை சபையோமும் ஊரோமும் ஆட்டு நூற்று நாழி நெய் கொடுக்க மெய்தேவியாலே சந்திராதித்தவல் அட்டுவோம் ஆனோம் செவலைசபை ஊரோம். ஈழவிளக்கு ஒன்று. இது பன் மாரேஸ்வரர் இரக்கை.

(௪) ஸ் ஸ்ரீ ஸ்ரீ உசாரையாண்டு 875-வது திருநாவலூர் திருதொண்டீஸ்வரகாத்த தேவர்க்கு முனையதியரையன் குலமாணிக்கன் இராமதேவன் வைத்த நெந்தாவிளக்கு ஒன்று, சாவாமூவா பேராடு 100 இவ்வாடு [illegible] கொண்டு சந்திராதித்தவல் எரிக்க நெய் அட்டுவார் ஆனார். 10 தேவதானம் ஏக நிரசதுர் வேறி மங்கலத்து சபையார்.

(௫) ஸ்வஸ்தி ஸ்ரீ சாரையாண்டு 876-வது திருநாவலூர் திருதொண்டீஸ்வரத்து மஹாதேவர்க்கு முனையதியரையர் குலமாணி கருமாணு தேவியார் அரிசி நக்கையார் வைத்த நெந்தா விளக்குக்கு வைத்த சாவா மூவா பேராடு நூறு. நூறுக்கொண்டு 11 நிசரம் உழக்கு மாதேவியால் நெய் அட்டுவோம் ஆனோம் அருப்பாக்கத்தாரோம் இது பன் மாரேஸ்வரர் இரக்கை.

(௬) ஸ்வஸ்தி ஸ்ரீ கோபகேசரி பர்மரான ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு௧௪ வது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துத் திருமுனைப்பாடி கோலூர் நாட்டு திருநாவலூரான ராஜாதித்த தேவபுரத்துத் திருத்தொண்டீஸ்வரத்து ஆடவல்லார்க்கு உடையார்படை 12 வீரராயணத் தெரிந்த வில்லின் செய்திட்டமாலைக்-னால் பொன் முக்கழஞ்சு அரை; இதில் நடவி கட்டினஸபடிகம் நாயகன் உன்ப—உரு பதினொட்டு சீலம் இரண்டும் முத்தோடு மாலை ஒன்று இது செய்வித்திடுவித்தான் படைக்கு நாயகம் செய்தமாரயான் பழூர் நக்கன், இவனே திருக்கைக்கு சாத்தி அருளடவி கட்டினஸ் படிகம் ஒன்று முத்தேறின காரை ஒன்று பொன் இவை பன் மாரேஸ்வரர் இரக்கை.

[இக்கல்வெட்டு—இந்தியஸ்தலங்களின் பூர்வீக வரலாற்றைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு வரலாற்றாக விநியோகிக்கப்படுகிறது. மேலும் இக்கல்வெட்டு விஷயத்தின் இடையிடையே இலக்கங்கள் போடப்பட்டிருக்கின்றமை அவ்விலக்கங்களுக்கு அடுக்கவருஞ் சொல்லை விளங்குவதற்காகக் கீழே போடப்பட்டிருக்கும் விளக்கத்தைக் காட்டுவதற்காக வேயாம் --ப-ர்.]

1 முதல் பரார்தகன். 2 முதல் பராந்தான் முல்மகன். 3 வைத்தஆட்டின்தொகை குறையாது இறந்தவற்றிற்குக் குட்டியைச்சேர்த்தல். 4 கூறி-சாற்றி. 5 சிறிர குரியர்வன்னவும் எரிய. 6 கேரளியார்பாதகாப்பில் வைக்கப்பட்டது. 7சோரிகைமுனையரையர் பரம்பரை குறிப்பு கன். 8 ஓர் இடை. 9 மாதேவியென்ற அரசியின்பெயரால் எழுங்கும்முகத்தல்தனவு. 10 அந்தணதானம். 11 நிமம்.கோயிலிக்கிச்சாயென எழுங்கும் பெயரையும் சோக்க. 12 பராந்தகன் தெரிந்தெடுத்த.

பிற்செய்தி.

இன்று சாயந்தரம் 3 மணிக்கு மஹாத்மாவும் முஸ்லீம்களும் சந்தித்தனர். மத்தியஸ்தத் தீர்வைக்கு விடுதலான பிரச்சினை விவாதிக்கப்பட்டது. 4—45 வரையில் ஒரு தீர்க்கமான முடிவும் காணவில்லை. மஹாத்மா இந்திய மஹாமந்திரியாரைச் சந்திக்கச் சென்றனர்.

சம்யுக்த ராச்சியத்திட்ட அமைப்பு நல்ல பலனைத் தருமென லேட் ஷாகி கூறினார். சங்கிலிதேயத்தச் சிற்றரசர் இவ்விஷயமாக நல்லபிப்பிராயங் கூறினர். மஹாத்மா, இப்போதுள்ள வில்லங்கத்தை விலக்குவதற்கு சம்யுக்த ராச்சிய மன்றத்தில் சிற்றரசர்களின் பிரதிநிதிகளில் மூன்றில் இரண்டு பங்கு தொகையினரும் ஒழிந்த இந்தியப் பிரதிநிதிகளில் மூன்றில் இரண்டு பங்கு தொகையினரும் அங்கீகாரம் பண்ணும் பிரச்சினைகளைச் சிற்றரசர்கள் ஏற்றுக்கொள்வதான கட்டுப்பாடு வைத்துக்கொண்டால் சிற்றரசுகள் இந்தியப் பிரதிநிதிகள் தம்மை அரைத்த விடுவர் என்ற நிலைமை வேண்டுவதில்லை யென்று கூறினர்.

'வெஸ்ற்மினிஸ்டர்' என்னும் இடத்தில் குடிவரையில்ல கிரிஸ்துக்களுக்கு என்னும் விஷயமாக மஹாத்மா பேசுகையில் "இந்தியாவிலே தாழ்ந்தோர் வரும்படி யடைக்கூடிய கேணிகளு லழிண்டு பிடித்து விட்டல் ஒடி, லக்கிரிஸ்தவ இவர்களைத் தடுப்பது மிக இலேசாக விருக்கும். இப்படிச் செய்வதற்கு இராணுவச் செலவையும் உத்தியோக வருக்கத்தின் செலவையும் மிக்குறைத்தல் வேண்டும்" லண்டன் 16—10—31.

லண்டன் கோலிஸ்களிலே வட்டமேசை மஹாநாடு சித்தியடையும் எண்ணம் ஜெயம் கண்டபெறுகின்றன.

17—10—31

மஹாத்மாவும் மீராபாயும் சொற்றிக்காம் என்ற இடத்திற்குச் சென்றிருக்கின்றனர்.

சென்ற ஸன்ட்ரல் சர்வகலாசாலையார் லோட் ஈர்வினுக்கு எல் எல். டி. பட்டத்தை விதித்தனர். மாணவர் குழு லதுடன் விதி சன்தோஷம் ஊர்வலம் சென்றனர்.

வலிகாமம்வடக்குத் தமிழ்ஆசிரியர் சங்கம்.

குறித்தசங்கத்தின் மாதாந்தப்பொதுக் கூட்டமொன்று இம் மாதம் 24-க் திகதி சனிவாரத்தன்று காலை 9மணியளவில் தெல்லிப்பழை ஆசிரிய கலாசாலை மண்டபத்தில்கூடும். அத்தருணம் கடைபெறும் நிகழ்ச்சிகள்:—

தலைவர் முன்னுரை.

1. பாலர் கழுசசிட்டை முறை—உபவித்தியாதரிசி ஸ்ரீமான். க. சுந்தரம் அவர்கள்.
2. பாலர் வகுப்பிற்கு மாதிரிப்பாடம் (சொல்லாக்கம்)— பண்டிதர் திரு V. மயில்வாகனர் அவர்கள்.
3 மனத் தத்துவ சாஸ்திரம்:— Miss. I. K. கினர் அம்மையாரவர்கள
4 பத்துப்பாட்டு (செய்யுள் பாடை) பரிமேலழகர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ. ரேகேத கிருஷ்ண பாரதியாரவர்கள்.
5. பூமிசாஸ்திரம் வர்த்தகபூமிசாத்திரம்— மகா முகாமைக்காரன் Rev Bro. பிலிப் S S J; என ஷெசங்கக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

அரசினரின் அசட்டையா அன்றிப் பொலிசாரின் சேட்டையா.

இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கட்கு:

ஐயர்,

சென்ற (15-9-31) செவ்வாய்க்கிழமையிரவு ஒன்பின் 11மணிக்கு யாழ்ப்பாணம் பெரியகடை மார்க்கட்டுக்குள் அகரு பாய் பெட்டி வியாபாரஞ் செய்து படித்துறங்கிய பெண்களை அக்கடைவீதியில் முயற்சியின்றித் திரியும் சில குறும்பர்கள் வந்து சருவி வாருக அடித்துப் படுகாயப்படுத்தி விட்டனராம். அவ்வாறதைக்கேட்ட ஓர் சாக்கு வியாபாரியினக்குடன் ஓடிப்போக அந்தச் சாக்கு வியாபாரிக்கும் அடித்துக் கொண்டுபோன விளக்கையும் அடித்து கொறக்கிவிட்டனராம். இவர்களுள் ஒரு கிழவிக்கு கண்ணுமண்டையில் பாரதூரமான இரத்தக் காயம். அதை வெட்டுக் காயம் என்றுஞ் சொல்லுகிறார்கள். இன்னொரு மனுஷிக்குக் கையிலே தாக்கமான காயம். இந்த இரு பெண்களும் யாழ்ப்பாணம் பெரிய ஆசுபத்திரியில் சிகிச்சை செய்யப்படுகிறார்கள். இன்னும் இருபெண்களுக்குக் காயங்கோற்றாத அடி. அவர்களும் சாக்குக்காரனும் ஆசுபத்திரிக்குப் போகவில்லையாம்.

ஐயா பத்திராதிபர் அவர்களே! பெரியகோடு கீழ்க்கோடு பொலிசு ஸ்தானம் மறியற்சாலை முதலிய பெரிய ஸ்தானங்கள், மாகாணத்தலைவர் முதலிய பெரிய உத்தியோகஸ்தர் ஸ்தானங்கள், நகரசங்கம் ஆகிய பலஸ்தலங்கள் அமைந்துள்ளதுமாய இச்சிறாரிக்குள் மேற்குறித்த அக்கிரமச் செயல்கள் நிகழ்ந்தது அரசினரின் அசட்டையா அன்றிப் பொலிசாரின் சேட்டையா.

அரசினரின் செங்கோலைத் தமக்குறுதுணையென நம்பியன்றோ பதினெட்டிருபது வயதுக்கப்பாலுள்ள பருத்தித்துறைப் பகுதியிலிருந்து தங்கள் சேலியத்தைக் கழிக்க உத்திக்கிரைதேட வியாபாரங் கொண்டுவந்து அரசினர் வீட்டுக்குள் அரசினருக்கு அடைக்கலமாகப்படுத்துறங்கிய ஏழைப்பெண்களை மடி குறும்பர் சருவி அடித்துத் தாங்கள் அரசட்சிசெய்து போக, அரசாட்சியார் காவல்வைத்த பொலிசுக்காரன் செயல் எப்படியென்ற சர்தேகத்தினாலேயே அரசினரின் அசட்டையா அன்றிப் பொலிசாரின் சேட்டையா என்ற தலையங்கமெழுந்ததாகும். அன்று குறித்த சலகம் கடைபெறும் பொழுது அங்கு காவல்புரிந்த பொலிசு அவ்விடம்போய் மீண்டதாகக் கேள்வியுருகிறது. களவுகள் லகங்கள் வரவண்ணம் அரசாட்சியாரால் காவல் வைக்கப்பட்ட பொலிசுக்காரர் இவ்வித சேட்டைக்கிடம்வைப்பது அரசினரின் சேட்டையென்றே சொல்லல் மிகையாகாது. முற்காலத்திலே பொற்கைப்பாண்டியன் முதலிய அரசர்கள் ஏழைக்குடிகளைப் பாதுகாக்கும் பெருஞ்சோக்குடையராய் மாறுவேடம்பூண்டுஇராக்காலங்களில் நகர்வலஞ் சென்றார்களென்று கூறுஞ் சரித்திரங்களையும் தற்காலம் ஏழைக்குடியனவர்களது சிரிப்பணத்திற்சம்பளம்பெற்றுக் காவல்புரியும் அரசாட்சி உத்யோகஸ்தர் செயலையுஞ் சிந்தித்தே அரசினரின் அசட்டையா அன்றிப் பொலீசரின் சேட்டையா என்ற கேள்விக்கிடமாயது.

இந்தப் பெரிய நகரில் சனப்புழக்கமான இடத்தில் இப்பேர்ப்பட்டசேட்டை நடந்தால் நாட்டுப் புறங்களில் எதுதான் நடவாது. முயற்சியின்றிச் சோம்பேறிகளாய்த் திரிந்து இன்னல் விளைக்கும் கெட்ட கூட்டத்தினரைப்பற்றி அரசினர் அசட்டை பண்ணாது விழித்திருப்பின் பொலிசரின் காப்புச் சேட்டையாகாது. இனிமேலாயினும் மாகாணத்தலைவர் பொலிஸ்பகுதி உத்தியோகஸ்தர் முதலியோரைத் தங்கள் பத்திரிகை வாயிலாக அருட்டி விழிக்கச்செய்து மடி கழிசறைக் கூட்டத்தினரை அகற்றிக் குறித்தஅக்கிரமச்செயல்போன்றனடவாதிருக்கச் செய்வீர்களாகவென வேண்டுகின்றேன்.

இக்கணம்
ஓர் வடமராட்சியான்.

புடைவைக் காட்சி!!!

அநேகருடைய வேண்டுகோட் கிணங்கி,
இலங்கை நெசவுசாலைச் சங்கத்தார்
இலங்கையில் நெசவுபண்ணப்பட்ட புடைவைகளின் காட்சியைப்
பின்னுமொருமுறை நடாத்தத் தீர்மானித்திருக்கின்றனர்.

24—10—31 சனிக்கிழமை தொடக்கம் ஒருவாரத்திற்கு, யாழ்ப்பாணம் சிவன்கோவிலுக்கு எதிர்ப்புறமாக இக்காட்சி நடைபெறும்.

சேலைகள், வேட்டிகள், சால்வைகள், தாவணிகள்—
இவைகளிற் புதுப்புதுமாதிரியானவை—
வருகிற தீபாவளிக்காகப் பிரத்தியேகமாக
நெசவுபண்ணப்பட்டவை.

எங்களுடைய விலைகளுடன் போட்டிபோட எவராலும் முடியாது.

மிகக்குறைந்தவிலை அதிகநயமானபுடைவை.

இவ் வருடந்தொடங்கி உங்கள் சுலோகம், சுதேசி! சுதேசி!!
என்ற சுலோகமாக விருக்கட்டும்.

இலங்கையில் நெசவுபண்ணப்பட்ட
புடைவைகளை வாங்குங்கள்.

சுதேசிமுறைகளை ஆதரியுங்கள்.

(Y. 20 19 10 31—

சைவக்கிரியை விளக்கம்.

—:o:—

சைவசமயக் கிரியைகளின் இயல்பையும் அவற்றைச் செய்யும் முறையையும், செய்வதற்குக்காரணத்தையும் இந்நூல் தெளிவாக எடுத்துக் கூறுவது. சைவசமயவியல், கிரியையுறுப்பியல், நீட்சையியல், விவாகவியல், கோயிலியல், அபரக்கிரியையியல் என ஆறு இயல்களைக் கொண்டுள்ளது. இதனை இலகுவான தமிழ் வசனநடையில் எழுதியவர் ஸ்ரீ சு. சிவபாதசுந்தரமவர்களேயாம். இதன் விலை சதம் 25 (அணா ௨) இந்துசாதன ஆலயத்திற் பெறலாகும்.

மானேஜர்,
இந்துசாதனம்.

வண்ணார்பண்ணை,
1—10—31.

விளம்பரம்.

இதன் பின்னுந் சொல்லப்படும் சந்தைகளும் காலையும் பஸ்ஸாண்டுகளும் 1932—ம் ஆண்டு தை மாதம் 1-ந் திகதி தொடக்கம் ஒரு வருஷத்திற்குக் குத்தகையாகக் கோடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்பட்டிருக்கின்றன.

முதல் சொல்லப்பட்ட ஆறு குத்தகைகளும் பத்து ரூபா கட்டி எடுத்த போரீல் கேள்வி கேட்கவேண்டும் மற்றச் சந்தைக்கு சுத்தோரிஸ் காசுகட்டிப் 'போம்' எடுக்கத் தேவையில்லை.

கேள்விப் பத்திரங்கள் ஒரு கடுதாசிக் கூட்டில் அடைக்கப்பட்டு கூட்டின் மேல்பக்கத்தில் இடது புறமாய் சந்தைக்குத்தகையின் கேள்விப்பத்திரமென்று எழுதி அதை நகாரங்கத் தலைவருக்கென்று விலாசம் போட்டு 1931-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ம் திகதி சனிக்கிழமை முன்னேரம் 12 மணிக்குப் பிந்தாமல் நகாரங்கக் கந்தோருக்கு அனுப்பப்படவேண்டும்.

ஒவ்வொரு குத்தகைக்கும் புறம்பான கேள்வி கேட்கவேண்டும். தெரியப்பட்ட கேள்விக்காரன் சங்கத்தலைவரால் நியமிக்கப்படும் தொகையை தெரியப்பட்ட திகதி தொடக்கம் மூன்று நாளைக்குள் கட்டவேண்டும். சங்கத்தால் அவருடைய கேள்வி ஏற்கப்பட்டபின் ஏற்கப்பட்ட திகதி தொடக்கம் ஒரு மாதத்துக்குள் கேள்விதொகையில் மூன்றிலொன்றில் மூன் கட்டப்பட்ட தொகையை நீக்கி மிகுதித்தொகையைக் கட்டவேண்டும். அத்துடன் தொத்தரிகச் செலவும் முத்திரையும் தான் பொறுத்துக் குத்தகை தொடங்கமுன் ஒரு பிணை உறுதியும் எழுதிக் கொள்ள வேண்டும். மிகுதியான தொகையைக் குத்தகையைப்பற்றிய விபரங்களடங்கிய கொந்தீசில் சொல்லியபிரகாரம் கட்ட வேண்டும் அப்படிக் காசுகட்டத் தவறினால் கட்டிய பத்து ரூபாய் பறிமுதலாய்ப் போய் விடும். சங்கத்துக்கு எந்தக் கேள்வியையாகுதல் அல்லது எல்லாக் கேள்வியையும் விலக்கிவிட அதிகாரமுண்டு.

கொந்தீசில் கோப்பிகள் இந்தக் கந்தோரிலும் கச்சேரியிலும் ஒட்டப்பட்டிருக்கின்றன. இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரங்களை என்னிடம் அறிந்துகொள்ளலாம்.

சந்தைகள்.

1. பெரியகடை (இந்தச் சந்தைக்குள் புதுக் கொட்டில்கள் சில அடுத்த வருஷம் தொடக்கத்தில் போடப்படும்.
2. பெரியகடைக்குக் கிட்ட இருந்தும் மீன் கடையும் பண்ணைத்துறையில் மீன்விற்கு மிடமும்.
3. சின்னக்கடை (இறைச்சிக்கடை பிறநீங்கலாக.)
4. கைக்குளச்சந்தை (புதிதாகக் கட்டிய இரண்டு அறைகளும் பிரதீங்கலாக.)
5. சிவியாதெருச் சந்தையும் பாரையூர் கடற்கரையில் மீன் விற்குமிடமும்.
6. பெரியகடைக்குக் கிட்ட இருந்தும் காலையும் முற்றெருவிலும் கச்சேரிக்குக் கிட்டவும் பெரிய கடைக்குக் கிட்ட இருந்தும் பஸ்ஸாண்டுகளும்.
7. நட்டாதெருச்சந்தை.

E T Hitchcock,
நகாரங்கக் கந்தோர்.

நகாரங்கக் கந்தோர்,
யாழ்ப்பாணம்.
ஐப்பசிமீ 13-௩ 1931-ம் ஆண்டு.
(G. 111 19)

கோவிற் பராமரிப்பு அறிவிப்பு.

அராலி வடக்கு மண்டையர்கிடனென வழங்கும் பதியில் வீற்றிருக்கும் வீரகத்திப்பிள்ளையார்கோவிலுக்குப் பாரம்பரியராகப் பூசகரும் பராமரிப்பகாரருமாக இருந்து பரிபாலித்து வரும், சிவசுப்பிரமணியக் குருக்களாகும் என்னிடமிருந்து, இக்கோவிலின் வளமை உரிமையையும், ஆட்சியையும், ஊரவர்கள் தம் அபிப்பிராயப்படி நீக்கிக்கொள்ளப் பலமுறைகளிலும் ஆரம்பிப்பதால், இக்கோவிலுரிமைக்குத் தத்துவகாரர் யாரோ? அவர் தம் சாதனவுரிமையே மு முறைபோல் வந்து பெற்றுக்கொள்ளும்படி இதனால் யவருக்கும் அறிவிக்கின்றேன்.

சிவ. ஐயரத்துரைக்குருக்கள்,
அராலி-வடக்கு.

(Mis 582. 12&15& 9.)

தாமே பாவித்துக் கொள்ளக்கூடிய
8வகையான மருந்துகள்
இதில் அடங்கியுள்ளன.
ஒரு பெட்டியின் விலை ரூபா 3 அணா 8.
லிட்டில்ஸ்
ஒறியென்டல் பாம் விற்குமிடம்:
பெரியதெரு,
மணிக்கூட்டுச்சந்தி,
கொழும்பு.
(தபால்பெட்டி இல. 298.)
அல்லது
லிட்டில்ஸ்
ஒறியென்டல் பாம் & பார்மசியூரிக்கல்ஸ்
லிமிடெட்
தபால் பெட்டி இலக்கம் 67,
சென்னபட்டணம்.
Y 9. 1 31—12 32.1A

ஆன்மைக் கனத்தின் அரசன்.
ஐவரரவி நூல் முப்பிரா லேகியம்.
ஒரேவளையில் பரீட்சைபார்க்கலாம்.
[illegible]
(Y. 18. 23-9 31 To 27 9 32)
K. V. Vippadurai & Co, Portonovo S. I.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறையறங்களோங்க நற்றவம் கேன்மியங்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by S ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna. at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.